பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!

அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1710)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 18 சனிக்கிழமை 31-03-2001 தொலைபேசி: 3378 ஒலி: 102

★ அரசு - புலிகள் சமாதானப் பேச்சில் திருப்பம்

# புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கை அரசு தயார்

## வன்னிக்கு இரட்டிப்பாக உணவு வகை அமைச்சர் கதிர்காமர் பேட்டி

(நமது நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுவிடயத்தில் அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்தி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முன்ஏற்பாடாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட அரசு தயாராக வுள்ளது.

அதேவேளை இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு இரட்டிப்பான உணவுப்பொருட்களை அனுப்பிவைப்பதற்கும் அரசுசம்மதம் தெரிவித்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் பேட்டி ஒன்றிலே தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சிற்கு அரசும் புலிகளும் ஒரேமேசையில் சமுகம் கொடுக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை.

அரசும் விடுதலைப்புலிகள் அமைப்பும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு ஏதுவாகக் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளுக்கு உணவுப்பொருட்களை இரட்டிப்பாக அனுப்பி வைக்கப்படுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், உடனடியாக அனுப்பி வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பத்திரிகையாளர் திருச்செல்வம் நேற்று விடுதலை செய்யப்பட்டார்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் வெள்ளவத்தையில் கைதுசெய்யப்பட்ட பத்திரிகையாளர்ஏ.என்.எஸ் திருச்செல்வம் சட்டமா அதிபர் எஸ்.கமலசபேசனின் உத்தரவை அடுத்து கோட்டே நீதவான் பிரியந்தபெரேராவினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்பத்திரிகையாளர் உட்பட நான்கு சந்தேகநபர்கள் கோட்டே நீதவான் பிரியந்தபெரேரா முன் நேற்று ஆயர் செய்யப்பட்ட போது கொழும்பைச்சேர்ந்த காதர் பக்கீர்நவ்வர் (வயது 34) முல்லைத்தீவைச்சேர்ந்த சிவபாதம் சுதாகரன் வயது29) ஆகிய இருசந்தேகநபர்களையும தொடர்ந்தும்விளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் பத்திரிகையாளர் திருச்செல்வத்தை விடுதலை செய்துள்ளார்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அரசு-புலிகள் பேச்சுஆரம்பித்தால் மனிதஅழிவுகள்குறைவடையும்

### எரிக்சோல்ஹெய்ம்நம்பிக்கை

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் போது தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் வழங்குவது குறித்து முக்கிய கவனமெடுக்கப்படுமென நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் லண்டன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியொன்றில்தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில் இருதரப்பும் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கு முன்னதாக ஸ்திரமான அத்திவாரத்தையிட வேண்டியுள்ளது எனக்குறிப்பிட்டார்.

இதுவிடயத்தில்இருதரப்பும் எவ்வாறு நடந்து கொள்வதெனக் கேட்ட கேள்விக்கு கருத்துக் கூறமறுத்துவிட்ட எரிக்சோல் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மனித அழிவுகள் குறையுமெனத் தான் நம்புவதாகக் குறிப்பிட்டார். [ந]

## மன்னாரில் கைதான இரு பெண்கள்மீதும் மருத்துவப்பரிசோதனை

(மன்னார்)

மன்னார் கிளர்ச்சித்தடுப்புப் பொலிசாரினால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானஇருபெண்களும் நேற்று மன்னார் வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக் குட்படுத்தப்பட்டனர்.

இதுசம்மந்தமான மருத்துவ அறிக்கைஒன்றை மன்னார் வைத்தியசாலை டாக்டர் சோமசேகரம் தயாரித்துள்ளார்மருத்துவ அறிக்கையில் உள்ள விடயங்கள் பாரதூரமானதாக இருப்பதை அடுத்து கருத்துக்கூற மறுத்த டாக்டர் சோமசேகரம் வைத்திய பரிசோதனை அறிக்கையை நீதிமன்றில்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கமலநாதன்மீதுதாக்குதல் பொலிசார்விசாரணை

(திருமலை)

வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாகத் துறைக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் கமலநாதன் நேற்று முன்தினம் தாக்கப்பட்டசம்பவம் தொடர்பாகபொலிசார்தீவிர விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த அவர் தற்பொழுது வைத்திய சாலையில் இருந்து தமது வீட்டுக்குச் சென்றுள்ளார். [ம]

## பயங்கரவாத தடை சட்டத்தைகாட்டி பிரிட்டன் இலங்கையை மிரட்டுகிறது

### சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர்

(கொழும்பு)

பயங்கரவாத அமைப்புக்கள் மீதான தடை அர்த்தமுடையதாக இருக்க வேண்டுமாயின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் புலிகள் மீது மட்டுமன்றி அதன் முன்னணி அமைப்புகள் மீதும் கடுமையாக பிரிட்டிஸ் அரசு அமுல் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு சிங்கள ஜாதிக சங்கமயத் தலைவர் எஸ்.எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிஹலஉறுமயவின்தேசிய அமைப்பாளர் சம்பிகாறணவாக்க கூறுகையில்புலிகள் பிரிட்டனிலிருந்து வெளியேறியதாகக் காட்டிக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினை தீர்ந்தால் பிரான்ஸ் உதவி வழங்கும்

### அமைச்சரிடம் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு சமாதானமதோன்றுமானால் இலங்கைக்கு உதவி வழங்க பிரான்ஸ் தயாராக இருப்பதாக பிரான்சியத் தூதுவர் மயாவிபரணிக் கிஞா இனவிவகார நல்லிணக் அமைச்சர் அத்தாவுடசெனிவிரத்தினாவிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவராலயத்தில் இடம் பெற்ற சந்திப்பில் கருத்து தெரிவித்த பிரான்ஸ் தூதுவர் அமைச்சர் அத்தாவுடசெனிவிரத்தின.விடம் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கைஅரசிற்குமதமிழீழ விடுதலைப் புலிகளுககுமிடையே சமாதானம ஏறபடாமல், உதவிகளை வழங்குவதில் எதுவித அர்த்தமுமில்லை.

இலங்கையில் வாழுகின்ற சகலஇனமக்களின் அபிலாசைகளையும் தீர்க்கக்கூடியவகையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றுகூறினர். (வ)

## தேங்காய்பிடுங்க சென்ற இருவர் காலை இழந்தனர்

(மந்திகை)

தேங்காய் பிடுங்கச் சென்ற இருவர் மிதிவெடியில் சிக்கி தமது வலது கால்களை இழந்துள்ளனர்.

இராசையா சிறீரங்கராசா வயது[37], மாணிக்கம்சின்னராசா வயது[41) ஆகியோரே காலை இழந்தவர்களாவர்.

இப் பரிதாபகரச் சம்பவம் நேற்றைய தினம் மிருசுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோயிலை அண்டிய பகுதியிலுள்ள தென்னம் தோட்டமொன்றில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின் போது

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் செல்வாவின் ஜனன தினம்

(வவுனியா)

தந்தைசெல்வாவின்103வது ஜனன தின நிகழ்வு இன்று பிற்பகல் 4மணிக்கு வவுனியா கண்டிவீதியில் உள்ளவசந்தம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நிர்வாகசபைக் கூட்டம்

(ஏழாலை)
யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய பழைய மாணவர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் நாளைபி.ப2.00மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-12)

## வைத்தீஸ்வரன் மெடிக்கல் அன் கிளினிக்

(வைஜி மெடிக்கல்)

யாழ். நகரின் முதல் நிலை வைத்தியர்களின் ஆலோசனையும் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களினால் வாகன அனுமதிப் பத்திரத்திற்குரிய வைத்தியப் பரிசோதனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

Skin (தோல்)
General (பொது)
V. O. G (மகப்பேறு)
Neuro (நரம்பியல்)
Surgary (அறுவைச் சிகிச்சை)
Paediatric (குழந்தை வைத்தியம்)

**வைத்தீஸ்வரன் மெடிக்கல் (வைஜி)**

462, ஆஸ்பத்திரி வீதி,
O. P. ப முன்பாக
யாழ்ப்பாணம்.

(கி-1636)

## மின்இணைப்பு பயிற்சிநெறி அராலியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா தொழில் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் மின் இணைப்பு பயிற்சி நெறி எதிர்வரும் 2 ஆம் திகதி அராலிவடக்கு செட்டியார் மடம் கிராமிய தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆறு மாத காலங்களைக் கொண்டதாக இப்பயிற்சி நெறி அமையும்,

இப்பயிற்சிநெறிக்கு கா: பொ: த. சாதாரண தரம் கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் கற்கவிரும்பும் மாணவர்கள் பயிற்சி நெறிபோதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## பொதுக்கூட்டம்

[துன்னாலை]
தென்மராட்சி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக்கூட்டம் நாளை மு.ப. 10 மணிக்கு நெல்லியடி திரு இருதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (உ-4)

## இன்று வயலின் அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)
இணுவில் இசைஞான திலகம் உ. இராதாகிருஷ்ணனின் மாணவன் உரும்பிராயூர் செல்வன் ச. திவாகரனின் வயலின் அரங்கேற்றம் இன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில், இளைப்பாறிய மேன்முறையீட்டு நீதிபதி கே: பாலகிட்டினர் பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார்.

வாழ்த்துரைகளை கம்பவாரிதி இ. ஜெயராஜ், கலாசூடாமணி சண்முகராகவன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (உ)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

எமது இடமாற்றத்தைப் பெற்றுத் தருவதற்கு பெரும் உதவி புரிந்த வடக்கு புனர்வாழ்வு—புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார இந்து சமய கலாசார அமைச்சர்

கௌரவ
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

துரிதகதியில் எமது இடமாற்றத்தை பெற்றுத்தருவதற்கு சகல வழிகளிலும் உதவிய ஈ. பி. டி. பி அமைப்பின் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர்.

**திரு. மதனராஜா**
அவர்களுக்கும்

ஈ: பி: டி: பி அமைப்பின் ஏனைய பிரமுகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடமாற்றம் பெற்ற
ஆசிரியர்கள்

(2678)

## UNIVERSITY OF JAFFNA SRILANKA

## Diploma Course In Physical Education

Applications are invited from qualified peresons who wish to register for the above course in the University of Jaffna.

**Reguirements:**

1. Should be in the age group 18-28 years.
2. Should have a minimum of three passes in the G. C. E (A/L)
3. Eligibility to apply for University admission in Sri Lanka and the selection will be made by a written examination and practical assessment conducted by the University.
4. Should pass the oral examination:
   Note: Preference will be given to those candiadtes who have participated in sports and athletics and won places at District and National level.
5. The University Senate may relax the age requirement in the case of the candidates who are already in the sports profession in Government and non-Goverment Sectors.

Course Fee: Rs. 5,000/- per year
Duration: Two years (Internal - Full Time)

Application forms and handouts colud be obtained from the Assistant Registrar/Exams & Admissions Branch, University of Jaffna on a payment of Rs. 50/- Duly filled application froms should be submitted to the Assistant Registrar, Examinations & Admissions Branch, University of Jaffna on or before 1st of may, 2001.

REGISTRAR

(C-1708)

யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் காங்கேசன்துறை/ பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிற்கு பொருட்களைஏற்றிச் (காவி) செல்வதற்கான

## கேள்வி கோரல் - 2001

பின்வரும் இடங்களிற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால்/ உணவு ஆணையாளரினால் கூட்டுத் தாபனங்களினால்/ அரச சார்பற்ற நிறுவனங்களினால்/தனியாரினால் யாழ்.மாவட்டத்திற்கு அனுப்பப்படும்பொருட்களை எடுத்துச் செல்வதற்கான கேள்வி கோரப்படுகிறது.

இக் கேள்வி விண்ணப்பபத்திரத்தினை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.100.00 ஐ செலுத்தி 02. 04. 2001 ஆம் திகதியிலிருந்து 10. 04. 2001 திகதி வரை பெற்று மேற்படி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் 20.04.2001ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ இடும்படி கேட்டுக் கொள்கின்றேன். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் ''காங்கேசன்துறை/ பருத்தித்துறை இலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பொருட்களை ஏற்றிச்செல்வதற்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. லொறிக்குரிய கேள்வி கோரல்

| இடத்திலிருந்து | இடம் வரை | | கூலி |
|---|---|---|---|
| காங்கேசன்துறைமுகம் | காங்கேசன்துறை | களஞ்சியம் | ... ... ... |
| காங்கேசன்துறை துறைமுகம் | யாழ்ப்பாணம் | '' | ... ... ... |
| | நாவற்குழி | '' | ... ... ... |
| | கொக்குவில் | '' | ... ... ... |
| | சங்கானை | '' | ... ... ... |
| | தொல்புரம் | '' | ... ... ... |
| | கோண்டாவில் | '' | ... ... ... |
| | ஊர்காவற்றுறை | '' | ... ... ... |
| | குருநகர் | '' | ... ... ... |
| | மானிப்பாய் | '' | ... ... ... |
| | புலோலி | '' | ... ... ... |
| பருத்தித்துறை துறைமுகம் | பருத்தித்துறை | களஞ்சியம் | ... ... ... |
| பருத்தித்துறை துறைமுகம் | யாழ்ப்பாணம் | '' | ... ... ... |
| | நாவற்குழி | '' | ... ... ... |
| | கொக்குவில் | '' | ... ... ... |
| | சங்கானை | '' | ... ... ... |
| | தொல்புரம் | '' | ... ... ... |
| | கோண்டாவில் | '' | ... ... ... |
| | நெல்லியடி | '' | ... ... ... |
| | ஊர்காவற்றுறை | '' | ... ... ... |
| | குருநகர் | '' | ... ... ... |
| | மானிப்பாய் | '' | ... ... ... |
| | புலோலி | '' | ... ... ... |

2. நிபந்தனைகள்

1. ஒப்பந்தகாரர் எம்மால் கேள்விப் பத்திரத்தில் தரப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற வரும்போது பின்வருவனவற்றைக் கொண்டு வர வேண்டும்.
   அ. வாகன உரிமைப்பதிவுச் சான்றிதழ் அல்லது இவை சம்பந்தமான ஏற்கக்கூடிய ஆவணங்கள். எனினும் இவை பற்றிய முடிவு அரச அதிபரினால் எடுக்கப்படும்.
   ஆ. நடப்பு வருடத்திற்கான வாகன வரிப்பத்திரம்.
   இ. செல்லுபடியான காப்புறுதிப் பத்திரம்.
3. கேள்வியில்தெரிவு செய்யப்பட்டவர் அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம்ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும்.
4. கேள்விக் காரர் வைப்புப் பணமாக 10 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் ஆயின் இதற்கான தொகையை வங்கி மூலம் உத்தரவாதமளித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் மூலம் உறுதிப்படுத்தித் தரல் வேண்டும்.
5. கேள்வி கோருபவர் சொந்தமாக குறைத்து 150 லொறிகளை கொண்டிருக்க வேண்டும். அல்லது இச் சேவைக்கு லொறி வழங்க முடியுமென வேறு தனிப்பட்ட பார ஊர்தி உரிமையாளரிடம் சம்மதத்திற்கான சத்தியகடுதாசியினைப் பெற்று, தம்மால் 150 லொறிகள் வழங்க முடியும் என அரச அதிபர் திருப்தி அடையும் வண்ணம் நிரூபிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களாயின் அதற்கான சான்றிதழை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபார்சுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி கோருபவர் லொறிகள் தேவை என செயலகம் கோரும் போது நாளொன்றிற்கு 60 லொறிகளிற்குக் குறையாது வழங்கத் தயராக இருக்க வேண்டும் லொறிகள் வழங்கத் தவறும் பட்சத்தில், லொறிவழங்காமையினால் அரசிற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபர்களிற்கு ஏற்படும் நட்டத்தை செலுத்த வேண்டும். இவ்வாறான நட்டத் தொகை கேள்விக்காரரால் செலுத்தப்படும் வைப்புப் பணத்திலிருந்து அறவிடப்படும் அத்துடன் லொறிகள் வழங்கத் தவறும் பட்சத்தில் கேள்விக்காரருடன் உள்ள ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும்.

க.சண்முகநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்
[கி-1714]

### திறனாய்வுக் களம்

# செம்மணியில் உருவான சோககாவியத்தை
# சொல்வடிவாய்க் காட்டும் 'மௌனத்துயில்'

ஏழாலை ஈன்றெடுத்த இளங்கவிஞன் கு. றஜீபனின் 'மௌனத்துயில்' எனும் கவிதைத் தொகுப்பு யாழ்ப் பாணத்துச் செம்மணியின் சோகங்களை உணர்வுகளால் வருடி உண்மைகளைச் சொல்ல முயன்றிருக்கின்றது.

மனித உறவுகள் அறுத் தெறியப்பட்டு மனித மாண் புகள் புறக்கணிக்கப்பட்டு மனிதமே மண்ணுக்குள் புதையுண்டுகிடக்கும் போது, எந்த உள்ளங்களுக்கும் நிம் மதியாக உறங்க முடிவ தில்லை. ஆனாலும் அதை வெளியில் கொண்டு வந்து படம் பிடித்துக் காட்டு வதற்கு ஒரு சிலராலேயே முடிகின்றது.

**செம்மணியின் சோகம்**

அராஜகங்களைக் கண்டு துவண்டெழும் இளைய உள்ளங்களில் இளங்கவிஞர் கு. றஜீபனும் ஒருவராக இன்று அடையாளம் காணப் பட்டுள்ளார். செம்மணியின் சோகம் இவரது செம்மனதை நன்கு வதைத்திருக்கிறது. சபிக்கப்பட்ட இந்தத் தமிழ் இனத்தை, அதன் வேதனை களை, சொல்ல முடியாத சோகங்களை மண்ணில் புதைந்த மனிதங்களை தனது மனத்திரை முன் தோண்டியெடுத்து எம்மண் ணில் கவிதைத் தொகுப்பாக வெளிப்படுத்துகின்றார்.

பல்வேறு பெரியோர்களும், அறிஞர்களும், தலைசிறந்த கவிஞர்களும் வாழ்த்துரை கள் வழங்கியுள்ளமை 'மௌ னத்துயில்' கவிதைத் தொகுப் பிற்குக் கிடைத்த மகுடமென் றேகூற வேண்டும். கணனிப் பதிப்பில் கையடக்கமாக பொருத்தமான பெயருடன் வெளியிடப்பட்டுள்ள இந்த 'மௌனத்துயில்' கவிதைத் தொகுதி முழுவதுமே செம் மணியின் சோகங்களைச் சொல்ல விழைகின்றது.

**புதுக்கவிதை**

மரபுக் கவிதைகளும், புதுக் கவிதைகளும், இக்கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள் ளன. இருந்தும் மரபுக் கவி தைகள் குறைவாகவே காணப்படுகின்றன. புதுக் கவிதைகளே அதிகம் இடம் பிடித்திருக்கின்றன. இளங் கவிஞர் கு: றஜீபன் தன்

**ஆ. ஜென்சன் றொனால்ட்**
ஈச்சமோட்டை

மனதில் கிடந்த ஏக்கத்தை இலகுவாகக் கொட்டுவதற்கு புதுக்கவிதை என்ற ஆயுதத் தைப் பாவித்துள்ளார் என் பது தெளிவு. மண்ணுக்குள் புதைந்த மனித வேர்கள் எனும் தலைப்பில் திட்டப் பட்ட கவிதையில் 'சமா தானப் புறாக்கள்பறக்கிறது. ஆனால் அதன் இறகுகளுக் குள்ளும் துப்பாக்கிகள் ஒளிந் திருக்கின்றன' - என சமாதா னம் கேள்விக் குறியாகியிருக் கும் நிலையை படம் பிடித் துக் காட்டுகின்றார். எங்கள் புதைகுழிகள் எனும் கவிதை யில், 'மண்ணில் தானே உரிமை கேட்டோம் மண் ணுக்குள் அல்லவா உரிமை தருகிறார்கள்' - என எம் இனத்தின் சாபக் கேட்டைச் சுட்டிக் காட்டுகின்றார். 'கற்பைக் கரைத்த காமுகன் எனும் கவிதையில் 'கழுத்தில் வீழ்ந்த மலர்மாலை சவக் கிடங்கில் போட்ட மலர் வளையமானது, இந்த நாட் டில்தான்'- என எமது சகோதரங்களது வாழ் வழி யும் சோகத்தை சுருக்க மாகவே எடுத்துக் காட்டுகின் றார். உரைக்கப்பட வேண் டிய உண்மைகள் எனும் கவிதையில், 'இந்த நாட் டில் இன்று மலிவாகக்கிடைக் கும் பொருள் மரணம் ஒன்று தான்'- என மரணம் மலிந்து விட்ட எமது மண்ணை மனக் கண்முன்கொண்டுவருகிறார். நதிகள் மீதில் என்றகவிதை யில்,' ஈனக் கொடுமை இனி யும்வேண்டாம் ஈழமண்ணே போர்கள் வேண்டாம்' என போர் முரசு ஒலிக்கும் மண்ணில் எதிர்ப்புக் கொடி தூக்கி எழுந்து நிற்கிறார்.

கலைக்கப்பட வேண்டிய வேஷங்கள், எனும் கவிதை யில், 'தும்மினால் கூட துப் பாக்கியை தயார் நிலையில் வைக்குமளவிற்கு யுத்தம் வக் கிரமானது'- என போரின் கொடூரத்தன்மையை உணர்த்தி விடுகின்றார்.

இவ்வாறு நாட்டில் நம்மக் கள் படும் வேதனை தனை உலகிற்கு காட்ட உண்மை களை உரைக்கது. றஜீபன் அவர்கள் கவிதை எனும் ஆயு தத்தை கையிலேந்தி எம்மை யெலாம் சிந்திக்க வைத்தி ருக்கிறார்.

**எதுகை மோனைகள்**

ஆனாலும்ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் தொட்ட தனால் கவிதைகளின் தன் னாட்சித் தன்மை சற்றுக் குறைந்தே காணப்படுகின் றது.

அத்துடன் புதுக்கவிதை என்றாலும் கூட எதுகை, மோனைகளை இயன்றவரை சேர்த்திருந்தால்கவிதைகளின் நயம் சற்றே இன்னும் உயர்ந் திருக்கும்.

மேலும் புதுக்கவிதைக் குரித்தான வசன முறிவுகளை வகையறிந்து இன்னும் நன் றாகப் பிரயோகித்திருந்தால் 'மௌனத்துயில்' மௌனத் தில் இன்னும் சிறப்பாக பேசி யிருக்கும் என்பதில் ஐய மில்லை.

எது எப்படியோ இளங்கவி ஞர் கு றஜீபனின் கன்னி முயற்சியின் வெளிப்பாடு மிக வும் பாராட்டத்தக்கதே. இருந்தும் இன்னும் தொடர்ந்து நெளிவு சுழிவு களைக்கவிதையினுள புகுத்தி னால், எதிர்காலத்தில் சிறப் புடன் பிரகாசிக்கும் கவிஞர் களில் ஒருவராக கு றஜீபன் திகழ்வார் என்பது உண் மையே.

---

## இராசி பலன்

31. 3 2001
(பங்குனி18. சனி)
சப்தமி பி.இ 2 58 வரை
மிருகசீரிடம்மாலை6 49 வரை
ராகு காலம் 9.12 - 10 42
சுப நேரம் 3 12 - 4 42
சித்தம்

**மேடம்**
அந்நியர் சந்திப்பு, வாக்கு மென்மை, காரியம் கை கூடும், தன வரவு.

**இடபம்**
வாக்குக் கலகம். தன விரயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு.

**மிதுனம்**
ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், ஜன வசியம், காரியம் கை கூடும்.

**கடகம்**
அலைச்சல், நித்திரைக் குறைவு, சுப செலவு, காரிய தாமதம்.

**சிங்கம்**
பொருள் வரவு, கௌரவம், காரிய நன்மை, மன மகிழ்ச்சி.

**கன்னி**
தொழில்லாபம், அதிகாரம், சுப நிகழ்ச்சி, முயற்சி கை கூடும்.

**துலாம்**
அரச நன்மை, பிரயாணம், கட்டுப்பாடு, உடல் சோர்வு.

**விருச்சிகம்**
எதிர்பாராத பிரச்சினை, மனக்கிலேசம், காரியத்தடை, வியாதி.

**தனு**
பிரயாணம், போசன சுகம், தன வரவு, முயற்சி கைகூடும்.

**மகரம்**
காரியநன்மை, புதிய முயற்சி, சத்துரு ஜெயம், வியாதி குணமடைதல்

**கும்பம்**
தாழ்வு நிலை. மனச் சஞ்சலம், பிரயாண இடையூறு. காரிய தாமதம்.

**மீனம்**
உஷ்ண ரோகம், தடுமாற்றம், தன்நம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

---

### எமது பாரம்பரிய பிரதேசங்கள் குறித்து
# முரண்பட்ட கருத்துக்கூற எவரையும் அனுமதிக்க முடியாது
மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மிகஇக்கட்டான சூழ் நிலையில் சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலையும் தீர்வுக்கான சூழலும் ஏற் பட்டுவருவது போல் தெரி கிறது.

இதன் காரணமாகவே எத்தனையோ முரண்பாடு கள கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவற் றைக் களைந்து 10 தமிழ்க் கட்சிகளும் தற்பொழுது ஒன்றிணைந்து, தமிழர்களின் விடிவிற்காக ஒருமித்து குரல் எழுப்பி வருகின்றோம்.

யாழ்: மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற போது, அதற்கு தலைமை வகித்த யாழ்.மாநகரசபை மேயர் சட்டத்தரணி என்.ரவிராஜ் தனது உரை யில் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

தமிழர்களின் தாயகக் கோட்பாட்டினை உதாசீனம் செய்யும் வகையில் அண்மை யில் அங்கு விஜயம் செய்த அமெரிக்கத்தூதுவர் கருத்துக் கூறிச் சென்றிருக்கிறார்.

வடக்கு-கிழக்கு மாகாணம் எமது பாரம்பரிய பிரதேசம் இது தொடர்பில் முரண் பட்ட கருத்துக்கூற எவரை யும் நாம் அனுமதிக்க முடி யாது என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில், எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தின் புனரமைப்பில் தற்பொழுது 75 வீதமான வேலைகள் முடிவடைந்து விட்ட நிலையில் தற்போது கட்டடத்திணைக்களத்தி டமிருந்து இந்த வேலைகளை கொழும்பில் உள்ள ஒப்பந்தக்காரர் ஒருவரிடம் கையளிப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த ஒப்பந்தம் யாழ்ப் பாணத்தில் இருந்து வேறு ஒருவரிடம் கைமாறுவதை தடுக்க வேண்டும் என்றார்.

கூட்டணிப் பிரதிநிதிக ளான பிரதிமேயர்செல்லன் கந்தையன்,செல்லையா விஜ யரட்ணம்,ஈ பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் த.சுபத்திரன், புளொட்உறுப்பினர் மு.தவ நாதன் ஆகியோரும் இக்கூட் டத்தில் உரையாற்றினார் கள். (உ)

# இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி வழங்குவது பற்றிய கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

வடக்கு புனர்வாழ்வு புனர மைப்பு அமைச்சினால் மிக விரைவில் நடைமுறைப்படுத் தப்படவுள்ள க.பொ.த [சா/த] படித்து விட்டு மேற் படிப்பைத் தொடர முடி யாதுள்ள இளைஞர், யுவதிக ளுக்கான தொழிற்பயிற்சி வழங்கும் திட்டம் தொடர் பாக கடந்த செவ்வாய்க் கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் கலந்துரையா யல் இடம்பெற்றது.

உடுவில் பதில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் அமைச்சின் அதிகாரிகள் குழு மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிர தேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இக் கலந்துரையாடலில், தேர்தல் தொகுதி ரீதியாக 100 தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய சூழலில் காணப்படும் மூல வளங்கள்அடிப்படையில்ஐந்து தொழிற் பயிற்சி நெறிகள் பிரித்துக் கொடுக்கப்படுவது எனவும் அப்பயிற்சி நெறி களுக்கு தலா,20தொண்டர் கள்தெரிவு செய்யப்படுவது எனவும் தீர்மானிக்கப்பட் டது;

மரவேலை தொழில்நுட்ப பயிற்சியும், கட்டடத் தொழிற் பயிற்சியும் சுன்னாக தச்சுவேலை பயிற்சி நிலை யத்திலும், பனையோலைக் கைப்பணிப் பயிற்சி, விவசாய உபகரணங்கள் திருத்தலும் பராமரித்தலும், உணவு பதனிடல் போன்ற பயிற்சி நெறிகள் கந்தரோடை ஸ்கந்தவேராதயாக்கல்லூரி யிலும் நடாத்துவது என ஆலோசிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

வியாபாரத்தின் பொருட்டு, அதிகாலை வேளை திருநெல் வேலி சந்தைக்குச் சென்ற அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்த சி. சசிக்குமார் (வயது25) என்பவர் மோட் டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (உ-10)

# பாரவூர்திகள் செல்லும் பாதையைமாற்றதீர்மானம்

(மந்திகை)

பருத்தித்துறை இறங்கு துறையிலிருந்துபொருட்களை ஏற்றி இறக்கும் பார ஊர்தி கள் பருத்தித்துறை 3ஆம் குறுக்குத் தெருவினூடாகச் செல்ல 524 படைப் பிரிவின் பிரிகேடியருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப் பது தொடர்பான தீர்மானம் அண்மையில் பருத்தித்துறை நகரசபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

நகரசபை உப தலைவர் நா. மணிவண்ணன் தலைமை யில் நடைபெற்ற இக்கூட்டத் தில்,

பருத்தித்துறை இறங்கு துறையிலிருந்துபொருட்களை ஏற்ற இறக்கச்செல்லும் பார ஊர்திகள நகரினூடாக, மீன் சந்தைப்பகுதிகளினூடாகவே செல்கின்றன.

இதனால் சந்தைக்குச் செல் லும் வியாபாரிகள், நுகர் வோர்கள் பல்வேறு அசௌ கரியங்களை எதிர்நோக்குவ துடன் தேவையற்ற விபத்துக் களும் ஏற்படுகின்றன என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நகரசபையில் பதில் கடமை யாற்றும் செயலாளரை நிரந் தரமாக்குதல் உட்பட மற் றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு உரியவர் களுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது. (உ-23)

# பயனுறுவகையில் அமைந்த ஆங்கில ஆசிரியர் பயிலமர்வு

(கந்தர்மடம்)

கல்வி உயர்கல்வி அமைச்சு செயலரின் 1997/ 98 ஆம் எண் சுற்றறிக்கைக்கு அமைய யாழ். கல்வி வலயத்தினரால் கடந்த வியாழக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூ ரியில் ஆங்கில ஆசிரியர்களுக் கான பயிலமர்வு ஒன்று நடை பெற்றது.

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 8, 11 க்கு கல்வி போதிக்கும் ஆங்கில ஆசிரியர் கள் பலர் கலந்து கொண்ட இவ் அமர்வில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் புதிய பாடத்திட்டம் தொடர்பாக வும் கற்பித்தல் அணுகு முறை பற்றியும் விளக்க மளித்தனர். (உ-37)

## அச்சுவேலியில் கணனிப் பயிற்சி நிலையம் திறந்து வைப்பு

[ஆவரங்கால்]

வலி கிழக்குப் பிரதேச சபையினால் கடந்த புதன் கிழமை அச்சுவேலி உப அலுவலகத்தில் கணனிப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப் பட்டதுடன்அன்றைய தினமே பயிற்சி வகுப்புகளும் ஆரம்பமாகின.

வலி கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தொடக்க தினமான அன்றே கணனிப் பயிற்சி பெற 135 பேர் விண்ணப்பித் திருப்பதாக பிரதேச சபைத்தலைவர் தனது உரையில் தெரிவித்தார்.

(உ-57)

## பெண்மையை இழிவுபடுத்தும் செயற்பாடுகள் குறித்து பிர. ச. தலைவர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

பெண்மையை இழிவு படுத்தும், வெறுக்கத்தக்க நிகழ்வுகள்சில சுன்னாகத்தில் இடம் பெற்றிருப்பது குறித்து ஆழ்ந்த கவலையும் அதிருப்தியும் வலிதெற்கு பிரதேச சபைத்தலைவர்என்கமலசபேசன் வெளியிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நிகழாதிருக்க தீவிர முயற்சிகள் எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க சுன்னாகத்தின் சில பகுதிகளில் சமூகச் சீரழிவு நடவடிக்கைகளான கசிப்புஉற்பத்திஇளைஞர்களிடையே புகைத்தல், மதுபானம் அருந்தல் பழக்கம் தீவிரமடைந்து வருவதாகவும்,

இவற்றைக் கட்டுப்படுத்த இறுக்கமான நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்ட போதும், இது விடயத்தில் தாம் சில இடையூறுகளை எதிர் கொள்ள வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-2)

## படையினரின் சோதனை நடவடிக்கை குடாநாட்டில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பாதுகாப்புப்படையினரின் பந்தோபஸ்து நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக தீவிரப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் படையினர் அடிக்கடி சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தி வருவதுடன், வீதிச்சோதனை நடவடிக்கைகளை அதிகரித்தும் காவலரண்களை புதிது புதிதாக அமைத்தும் வருவதனைக் காணக்கூடியதாய் உள்ளது.

இது தவிர, கரையோரப் பகுதிகளில் துப்பாக்கி மற்றும் குண்டுச் சத்தங்கள் அடிக்கடி கேட்பது குறித்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## 5வருடங்களுக்கு ஒருமுறை அரசஊழியரின் இடமாற்றம் கருமையான நடைமுறை

(கொழும்பு)

அரச ஊழியர்களின் இடமாற்றம் அடுத்த வருடம் முதல் கடுமையாகஅமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களை ஐந்து வருடத்திற்கு ஒரு தடவை இடமாற்றம செய்யும் நடவடிக்கை அடுத்த வருடம் முதல் முறையாக இடம் பெறவுள்ளது.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்படுவோர் கட்டாயம் இடமாற்றம் செய்யப்பட்ட இடத்திற்குசெல்ல வேண்டும். இடமாற்றத்தை ஆட்சேபிக்கும் பட்சத்தில் அவர் சேவையைவிட்டுவிலகியவராக கணிக்கப்படுவார்.

அத்துடன் அரச ஊழியர்களின் சம்பள ஏற்றத் தாழ்வுகளை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

## கைத்தொழிற் பேட்டையில் மண் அகழ்வு தீவிரம் குன்றும் குழியுமாக காட்சி

(ஆவரங்கால்)

அச்சுவேலியின் கைத்தொழிற்பேட்டைப்பகுதியில் மண் அகழ்தல் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனால் வளம் நிறைந்த அப்பூமி பெரும் குழிகள் நிறைந்ததாகமாறிவருகிறது.

இதேவேளை, கைத்தொழிற்பேட்டையை புனரமைப்புச்செய்து முன்னரை விடச் சிறப்பாக இயங்கவைக்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் ஏற்பாட்டில் பல இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-57)

## புத்தர் சிலையின் தலை விஷமிகளால் உடைப்பு

(கொழும்பு)

ரஜமகாவிகாரையில் உள்ள புராதன புத்தர் சிலை ஒன்றின் தலை விஷமிகளால் உடைத்துச் சேதப்படுத்தப் பட்டுள்ளது.

இது குறித்து இவ் விகாரையின் பிக்கு ஒருவர் பொலிஸிற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இச் சிலையின் தலை சுமார் ஒன்றரை அடி நீளம் உயரமுடையது.

புதையல் தேடுபவர்கள் இதனை உடைத்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(செ)

## க.பொ.த. உயர்தர மாணவர்க்கான உயிரியல்பாட வினாக்கள் - 08

### ஆசிரியர்: கே. சுகந்தன் B. Sc

#### மாதிரி அமைப்புக் கட்டுரை வினாக்கள்

**வினா—I**

A) கல்சியம் B) காபன் C) அயடின் D) இரும்பு
E) நைதரசன் F) ஒட்சிசன் G) பொ ஸ் H) கந்தகம்

**கீழே தரப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான மூலகங்களை மேலே தரப்பட்டுள்ள மூலகங்களில் இருந்து தெரிவு செய்க**

1) எல்லாச் சேதனச் சேர்வைகளிலும் அதிகளவில் காணப்படும் மூலகம் — — — —
2) நியூக்ளிக்கமிலங்களில் காணப்படுவதும் சக்தி கடத்தப்படுவதிலும் சம்பந்தப்பட்டுள்ள மூலகம் — — — — — — —
3) தைரொயிட் ஓமோனின் கூறு — — — — — — — —
4) புரதங்களில் காணப்படுவதும் நியூக்கிளிக்கமிலங்களில் காணப்படாததுமான மூலகம் — — — — — — —
5) கலச்சுவாசத்திற்கு அவசியமான மூலகம் — — — — — —
6) பற்களினதும் எலும்பினதும் பிரதான கூறு — — — — — —
7) பச்சையத்தின் கூறு அல்லாததும் அதன் ஆக்கத்திற்கு அவசியமான மூலகம் — — —
8) சில புரதங்களில் மாத்திரம் காணப்படக் கூடிய மூலகம் — — — — —
9) தசைச்சுருக்கத்தில் அயன் வடிவில் பங்குபெறும் மூலகம் — — — — — —
10) வெண் பச்சை நோய்க்கு காரணமாக அமையக் கூடியது — — — — —

**வினா—11**

1) a) i) ஆரைச்சமச்சீர் என்றால் என்ன?
— — — — — — — — —
— — — — — — — — — —

ii) ஆரைச்சமச் சீரைக்காட்டும் விலங்குக் கூட்டம் ஒன்றின் பெயரைத் தருக?
— — — — — — —

iii) முற்பக்க அந்தத்தையும் பிற்பக்க அந்தத்தையும் முதுகுப்புற மேற்பரப்பையும் வயிற்றுப்புற மேற்பரப்பையும் கொண்ட விலங்கு — — — — சமச்சீரைக் காட்டும்;

iv) உடற் குழி என்றால் என்ன?
— — — — — — — — —

v) கூர்ப்பின் போது முதலிலே உடற்குழியைக் காட்டிய பிரதான விலங்குக் கூட்டம் கணம் — — — — — — —இனைச் சேர்ந்தது?

b) **பின்வரும் கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான ஒவ்வொரு கட்டமைப்பு அம்சத்தைத் தருக?**

i) Coelenterata — — — — — — —
ii) Platyhelminthes— — — — — — — —
iii) Mollusca — — — — — — — —
iv) Aves — — — — — —
v) Echinodermata — — — — — — —

C) i) இனம் என்றால் என்ன?
— — — — — — — — — —
— — — — — — — — — —
— — — — — — — — — —

ii) மாணவன் ஒருவன் மனிதனின் விஞ்ஞானப் பெயரை H OMOSAPIENS என எழுதினான்.இதனை இரு சொற் பெயரீட்டு விதிகளுக்கு ஏற்ப திருத்தமாக எழுதுக?
— — — — — — — — — —

iii) அமைப்பொத்த கட்டமைப்புக்கள் என்பவை யாவை?
— — — — — — — —

iv) சமச்சீர் இன்றிய உடலைக் கொண்டுள்ள விலங்கு ஒன்றைப் பெயரிடுக?
— — — — — — — —

v) உடலறையைக் கொண்டிராத Metazoan கணம் ஒன்றைப் பெயரிடுக?
— — — — — — — —

vi) கீழே தரப்படும் விலங்குகளின் சுவாசக் கட்டமைப்பையும் கழிவுக்கட்டமைப்பையும் தருக?

| | சுவாசக்கட்டமைப்பு | கழிவுக்கட்டமைப்பு |
|---|---|---|
| i) மண்புழு | — — — — — | — — — — — |
| ii) இறால் | — — — — — | — — — — |
| iii) திமிங்கிலம் | — — — — — | — — — — |
| iv) தோட்டநத்தை | — — — — — | — — — — — |
| v) முதலை | — — — — — | — — — — — |

**வினா-III**

D) அ) i) DNA மூலக்கூறின் கட்டமைப்பைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகளைப் பெயரிடுக?
— — — — —

ii) மீண்டும் மீண்டும் தோன்றி DNAமூலக் கூற்றை உருவாக்கும் அலகுகளைப் பெயரிடுக?
— — — — — — —

iii) மேலே (ii ல் குறிப்பிட்ட அலகுகள் ஒவ்வொன்றும் ஆக்கப்படுவது?
— — — — — — — —

iv) DNA மூலக் கூறில் உள்ள பியூரின்களாவன?
— — — — — — —

v) பியூரின், பிரிமிடின் ஆகிய இரண்டு மூலக் கூறுகளில் பெரியது எது?
— — — — — —

ஆ) i) DNA மூலக்கூறு கலத்தின் செயற்பாடுகளில் பெரும் பாலானவற்றைக் கட்டுப் படுத்தினாலும் அது நேரடியாகத் தானே கட்டுப்படுத்தும் முறைகளாவன
— — — — — — — —
— — — — — — — —

ii) வெவ்வேறு RNA வகைகளைப் பெயரிட்டு ஒவ்வொன்றும் உற்பத்தியாகும் இடத்தையும் புரியும் தொழிலையும் குறிப்பிடுக?

| வகை | உற்பத்தியாகும்இடம் | தொழில் |
|---|---|---|
| — — — — | — — — — | — — — — |
| — — — — | — — — — — | — — — — |
| — — — — | — — — — | — — — — — |

iii) TACCGATAC எனும் ஒழுங்குடைய ஒரு DNA இழை தரப்பட்டுள்ளது; இதன் நிரப்பு இழையையும் MRNAஇழையையும் தருக;
நிரப்பு இழை — — — — — —
MRNA இழை — — — — — —

iv) புரதத் தொகுப்பில் DNA இன் பங்கு யாது?
— — — — — — — —

v) புரதத்தின் வகை மாறுபடக் காரணமாக அமைவன?
— — — — — — — — —
— — — — — —
— — — — — — — —

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# கன்றுக் குட்டி இல்லை

சங்கிலி வேலை வெட்டிஇல்லாமல் திரிபவன், ஒரு நாள் தெருவழியே போகும் போது ஒரு தென்னந் தோப்பைப் பார்த்தான். மரங்களில் குலை குலையாக இள நீர்க் காய்கள் இருப்பதுகண்டு தோப்புக்குள் திருட்டுத் தனமாக நுழைந்து ஒரு மரத்தின் மீது ஏறியும் விட்டான். அப்போது தோட்டக் காவலாளி அவனைக் கண்டு விட்டான். ஓடோடி அவன் இருக்கும் மரத்தடியே வந்து, 'யாரடா அவன் மரத்தின் மேல் ஏறுவது? இறங்கு கீழே' என்று கத்தினான்.

சங்கிலியும் அவனிடம் அகப்படாமல் தப்பிப் போக ஒரு தந்திரம் செய்தான். அவன் 'அதுதான் இறங்கிக் கொண்டிருக்கின்றேனே, தெரிய வில்லையா? நான் நினைத்தது சரியாயிற்று இதன் மேலே கன்றுக் குட்டி இல்லைத்தான் 'என்று கூறிக் கொண்டே இறங்கி வந்தான். காவலாளியும் தென்னை மரத்தில் கன்றுக் குட்டியா? எனவே, சங்கிலியும் 'எனக்கு என்ன தெரியும்?' எசமானர் தான், என்னிடம் சங்கிலி நம் கன்றுக் குட்டியைக் காணவில்லை. ஒரு மரம், மட்டை விடாமல் எல்லா இடத்திலும் தேடிப் பார்' என்றார். அது தான் தேடினேன். நீயே வந்து என் எஜமானிடம் சொல் அப்போதுதான்மரத்தின்மீது கன்றுக்குட்டி இராது என்பதுஅவருக்குப் புரியும்' என்றான். காவலாளியும்' அட அப்பாவியே உன் மூளை இவ்வளவு தானா?' என எண்ணி அவனைத்தன் குடிசைக்குஅழைத்துப் போய்நீர், மோர்கொடுத்துக் குடிக்கச் சொல்லி அனுப்பி வைத்தான்.

நன்றி.

அம்புலிமாமா

உருவில், தெல்லிப்பழை

# கோட்டப் பாடசாலை அதிபர்கள்

# சுன்னாகம் படை அதிகாரி சந்திப்பு

## குறை நிறைகள் கேட்டறிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகப்பகுதி இராணுவத்தளபதி, உடுவில் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களை அண்மையில் சந்தித்து அவர்களுடைய குறை நிறைகளை கேட்டறியும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியுள்ளார்.

இராமநாதன் கல்லூரியில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலின்போது முக்கியமாக மேற்படி பாடசாலைகளின் உடனடித்தேவைகள் குறித்து ஆராயப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்புப் படையினரால் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் தமக்கு உடன் தெரியப்படுத்தும்படி இராணுவத் தளபதியால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், விசேட அடையாள அட்டையைத் தொலைத்த அல்லது விடுகைப்பத்திரம் பெறுவதற்காக அதனைப் பாடசாலையில் ஒப்படைத்துவிட்டு தற்போது போட்டோப்பிரதிவைத்திருக்கும் மாணவர்கள் விசேட அடையாள அட்டையைப் பெறுவதற்கு இலகுமுறைகளைக் கையாளுமாறு இராணுவத் தளபதியால் ஆலோசனை கூறப்பட்டது.

இது தவிர, எல்லைப்புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அருகில் இடம்பெறும் இராணுவப் பயிற்சினால் எதிர் கொண்டுள்ள அச்சுறுத்தல் நிலை குறித்து அங்கு கூடிய பாடசாலை அதிபர்களால்எடுத்துக்கூறப்பட்டது.

இக் கலந்துரையாடலில், கல்வித் திணைக்களத்தின் சார்பில், திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளர் சச்சிதானந்தன், உடுவில் கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-2)

## வீதி ஒழுங்கு பேணும்

# நடவடிக்கை; சமுர்த்தி பணியாளர் முன்னெடுப்பு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பாடசாலைகள் தோறும் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பானகருத்தரங்குகளை நடாத்திவருகின்றனர்.

கரவெட்டி பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களுக்கு வீதிகளில் செல்லும் முறை, விபத்துக்களை தடுத்தல், வீதிகளில் பயன்படுத்தப்படும் குறியீடுகள், தொடர்பான விளக்கங்களை வழங்கி வருகின்றனர். (உ-23)

## பல ஆயிரம் ரூபா பணத்தை

# உரியவரிடம் ஒப்படைத்த லோன்றி உரிமையாளர்

(மந்திகை)

சலவை செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட உடுப்பிற்குள் இருந்துபல ஆயிரம் ரூபா பணத்தை எடுத்து பத்திரமாக உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

ஆவரங்காலில் உள்ள லோன்றிஒன்றில் சலவைசெய்வதற்காக கொடுக்கப்பட்ட உடுப்பிற்குள் இருந்து 17 ஆயிரத்து 500ரூபாபணத்தை எடுத்த மேற்படி லோன்றி உரிமையாளர்,

அதற்கு உரியவரை இனம் கண்டு மேற்படி பணத்தை ஒப்படைத்துள்ளார்.

லோன்றி உரிமையாளரின் நாணயத் தன்மையைப் பலரும் பாராட்டியுள்ளனர். (உ-23)

# ஏப்ரல் 12 வரை இருவருக்கு விளக்கமறியல்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த கைதிகள் இருவரை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது,

அவர்களை ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

வரணி இயற்றாலையைச் சேர்ந்த சி. சுதாகரன், புதிய செம்மணி வீதி கல்வியங்காட்டைச் சேர்ந்த வே. ஜெயராசா ஆகிய இருவர் மீதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (உ-9, 10)

# கதிர்காமரின் கூற்றுக்கு நாம் பொறுப்பல்ல

## லிண்டா டபீல்ட்

(கொழும்பு)

''இலங்கை அரசு கேட்டதற்காகவே விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்ததாக அமைச்சர் கதிர்காமர் கூறியிருந்தால், அதற்கு நாம் பொறுப்பல்ல.''

இவ்வாறு பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா டபீல்ட் தன்னைச் சந்தித்துப் பேசிய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இன பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கானமுயற்சிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பிரதானபங்காளிகள் என்பதனை தெளிவுபடுத்துகின்ற அதே நேரம்; சமாதானப் பேச்சு வார்த்தையின் அவசியம் குறித்து இலங்கை அரசிற்கும்அழுத்தம் கொடுத்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இருபத்தொரு வெளிநாட்டு அமைப்புக்களை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்துள்ளமையானது, அந்த அமைப்புக்களின் பயங்கரவாத அமைப்புக்களை கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டதே ஆகும்.

இதனை தனியாக விடுதலைப் புலிகளின் தடையுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## பழரச வியாபாரி

# கிணற்றுள் வீழ்ந்து பரிதாப மரணம்

(யாழ்பாணம்)

தண்ணீர் அள்ளிய சமயம் தவறி கிணற்றுள் வீழ்ந்த பழரச வியாபாரி பரிதாபமாய் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் நவாலிவீதி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த க.கந்தப்பிள்ளை (வயது 58) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவரது சடலம், மரண விசாரணைகளின் பொருட்டு யா/போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது (உ-10)

# பட்டம் வழங்கி கௌரவிப்பு

(இணுவில்)

பிரம்ம ஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்களின் ஷஷ்டியப்தப் பூர்த்தி விழாவின் போது புன்னாலைக்கட்டுவன் ஐயனார் தேவஸ்தானம் அவருக்கு, சிவாச்சார்ய ரத்னா, எனும் பட்டம் வழங்கிக்கௌரவித்துள்ளது. (உ-49)

# பண்ணிசைப் போட்டி

[இணுவில்]

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் மேற்படி ஆலய மஹோற்சவத்தை ஒட்டி பண்ணிசைப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

ஆரம்பப் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என 4 பிரிவுகளாக இப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (உ-49)

## நிர்வாக சேவைப் பரீட்சை

# விண்ணப்பிக்கும் வயதெல்லை நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

2001 ஆம் ஆண்டிற்கான இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்களில் சில மாற்றங்கள் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உச்ச வயதெல்லை 28 இல் இருந்து 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது

அத்துடன் விண்ணப்பிக்கும் முடிவுத் திகதியும் ஏரல 9 இல் இருந்து 16 ஆம் திகதி என நீடிக்கப்பட்டுளது.

இது தொடர்பான விபரங்களை ஏப்ரல் 6 இல் வெளியாகும் வர்த்தமானி அறிவித்தலில் பார்வையிடலாம். (உ)

# மஹோற்சவம் ஆரம்பம்

(அரியாலை)

இணுவில் அருள்மிகு சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஏப்ரல் 5,6,7 ஆம் திகதிகளில் தேர், தீர்த்தம், பூங்காவன உற்சவங்கள் இடம் பெறும்.

உற்சவ தினங்களில் சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்களின் சொற்பொழிவு இடம் பெற்று வருகிறது.

தேர்த் திருவிழா அன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி இசை ஆசிரியர் சி. சிவஞானராஜாவின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. (உ-106)

## கசிப்பு உற்பத்தி

# கட்டுப்படுத்தும்முயற்சியில் இளைஞர்கள் தீவிரம்

(மந்திகை)

கசிப்பு உற்பத்தி ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்த அல்வாய் கொற்றாவத்தைப் பகுதியில் மீண்டும் அவ் உற்பத்தி மற்றும் விற்பனை தலைதூக்கியிருப்பதாக அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இறுதிப் பகுதியில் இப்பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து எடுத்த அதிரடி நடவடிக்கையை அடுத்து கசிப்பு உற்பத்தி ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், விடாப்பிடியாக கசிப்பை ஒழிக்கும் முயற்சியில் 60 ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் முனைப்புடன் இணைந்திருப்பதாய் தெரியவந்துள்ளது (உ-23)

# மண்டபங்கள் அமைப்பு

(இணுவில்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரபபிள்ளையார் ஆலயத்தின் புதிய இளைப்பாற்றுமண்டபம், தீர்த்த மண்டபம் என்பன அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன (உ-49)

# 'பெருங்குடிமக்கள்' கொண்டாட்டம் வீதியால் செல்வோர் திண்டாட்டம்

(அரியாலை)

குடாநாட்டில் தற்போது மதுமயக்கத்தில் வீதியில் வீழ்ந்து கிடப்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

பிரதான வீதிகளைக்கூட இவ்வாறான பெருங்குடிமக்கள் விட்டு வைக்காததால், சில வேளைகளில் போக்குவரத்திலும் பெரும் இடைஞ்சல்களை எதிர்நோக்குவதாக பல தரப்பில் இருந்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க போதை மயக்கத்தில் வீதியில் கிடப்பவர்களின் சொத்துக்களை சூறையாடுவதையே வேலையாகக் கொண்டு சில கும்பல்கள் செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை,

கட்டுப்பாடற்ற கசிப்பு மற்றும் மதுபானங்கள் விற்பனையே இந்த நிலையைத் தோற்றுவித்திருப்பதாய் சமூகவியலாளர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-106)

# ஆளும் கட்சியின் புதிய தலைவர்
## ஜப்பானின் அடுத்த பிரதமர்

(டோக்கியோ)
ஜப்பானின் ஆளும் கட்சித் தலைவருக்கான தேர்தல் அடுத்த மாதம் நடைபெற இருக்கிறது.
ஆளும் கட்சிக்கு தகுதியான புதிய தலைவரைத் தெரிவதற்குரிய தேவைவேற்பட்டுள்ளதாலும் நாட்டின் நிர்வாகத்தையும் கட்சியையும் சீராக்க புதிய தலைவர் தேவைப்படுவதாகவும் கருதுவதால் அடுத்த மாதம் நடைபெறும் கட்சிக் கூட்டத்தில் புதிய தலைவர் தெரிவு செய்யப்பட இருக்கிறார்.
இவரே ஜப்பானில் புதிய பிரதமராக இருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

### தன் தவறை உணர்ந்து
# பொதுமக்களிடம் பகிரங்கமாய் மன்னிப்புக் கோரிய இந்தோ. அதிபர்

(ஜகார்த்தா)
இந்தோனேஷிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட் நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுள்ளார்.
நாட்டின் இனப்படுகொலைகளுக்கும், நாட்டில் தொடரும் வன்செயல் நடவடிக்கைகளுக்கும் தன்னுடைய ஆட்சியின் தன்மையே காரணம் என்பதை ஒத்துக்கொண்டதன் பேரிலேயே இம் மன்னிப்பு கோரும் படலம் இடம்பெற்றிருப்பதாய் அறிய முடிகிறது.
இதேவேளை, பலகோடிரூபா ஊழல் குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது, (உ)

# கொலம்பிய விமானத் தளம்மீது குண்டுத்தாக்குதல் முயற்சி முறியடிப்பு

[பொகட்டா]
கொலம்பிய விமானத் தளத்தில் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ள எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
கொலம்பியாவில் உள்ள பிரதான விமானப் படைத் தளத்தினைத் தாக்குவதற்காக குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்றை கெரில்லாக்கள் செலுத்தி வந்ததாகவும் அதனை அடுத்து பொலிஸாரின் முயற்சியால் இது தடுக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.
கெரில்லாக்கள் இலக்கு வைத்த மேற்படி விமானப் படைத் தளத்தில் உள்ளூர் விமானிகள் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.
(உ-9)

# குண்டு வெடிப்பில் சிக்கி இஸ்ரேல் மாணவர்கள் பலி

(ஜெருசலேம்)
இஸ்ரேல்- பலஸ்தீன எல்லைப் புறத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் மூன்று மாணவர்கள் கொல்லப்பட்டனர், முப்பது பேர் காயமடைந்துள்ளனர்.
எல்லைப் புறத்தில் நெரிசல் நிறைந்த வீதியில் பாடசாலை பஸ்ஸில் மாணவர்கள் சென்றுகொண்டிருந்த வேளை குண்டு வெடித்து மூன்று மாணவர்கள் பலியாகியும் 30 பேர் காயமடைந்தும் உள்ளனர்.
இச் சம்பவத்திற்கு காமா தீவிரவாத அமைப்பு உரிமை கோரியிருப்பதாக தெரியவந்துள்ளது. (உ-து)

## சத்திரசிகிச்சை வெற்றி

இந்திய குடியரசுத்தலைவர் கே. ஆர். நாராயணனுக்கு நடந்த சத்திர சிகிச்சை வெற்றியளித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த இரு வாரங்களுக்கு முன் அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவரது பித்தப் பையில் இருக்கும் கல் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்கள். (து)

# ஆயுதப்பேர ஊழல்விவகாரம் இணையத்தளசதித்திட்டம் அம்பலமாகின்றது

(புதுடில்லி)
ஆயுத பேர ஊழல் விவகாரம் இணையத் தளத்தில் அம்பலப்படுத்தப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவரென்ற வகையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மத்தியூ மத்திய உள்த்துறை அமைச்சில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.
இணையத்தள ஊழல்திட்டம் மத்தியூவின் அலுவலகத்தில் திட்டப்பட்டதென்றும் இதற்கு மத்தியூவே முழுக் காரண கர்த்தா என்றும் செய்திப் பத்திரிகையொன்றில் செய்தி வெளியானதையடுத்து மத்தியூ விசாரிக்கப்பட்டு வருகிறார்.
இதே வேளை சமதாக்கட்சியைச் சேர்ந்த சென், தொலைக் காட்சியில நிதியமைச்சர் ஜஸ்வந்சிங் பற்றிக் கூறிய கருத்துக்கு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுள்ளார்.
ஆர் கே. சென் நிதியமைச்சா சிங்கிற்கு எழுதிய கடிதத்தில் தான் மற்றவர்கள் பற்றி கூறிய கருத்துகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும்தெரிவித்துள்ளார்.
(உ-து)

# பூகம்பத்தால் பாதிப்புற்ற மக்களுக்கென 8 இலட்சம் இலவச வீடமைப்புத்திட்டம்

(ஸ்ரீநகர்)
குஜராத்பூகம்பத்தால்பாதிக்கப் பட்டமக்களுக்கு 8 இலட்சத்துக்கு மேற்பட்ட வீடுகளை இலவசமாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.
8 இலட்சம் வீடுகளைக் கட்டும் இப்பாரியதிட்டம் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும், இப்பணி வரும் மழைக் காலத்துக்கு முன்னதாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும் என மேலும் அறிவிக்கப் பட்டுள்ளது.
இதேவேளை கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தோடு இவ்வருடம் அங்கு 400 ற்கும் மேற்பட்ட பூகம்பங்கள் ஏற்பட்டிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.
(உ-9)

## செய்திப் பரல்

★ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேலியப் படை வீரர்கள் ரப்பர் தோட்டாக்களால் சுட்டதில் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

★ நேபாளத்தில் கிராமவாசிகளைஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று பாதையை விட்டு விலகியதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

★ காஷ்மீரில் பிரிவினைவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 4 இந்தியப்படைப்பிரிவினர் உட்பட 7 பேர் இறந்துள்ளனர்.

★ இந்தியா கடந்த புதனன்று மேற்கொண்ட விண்வெளிக்கு ரொக்கெட் அனுப்பும் பரீட்சார்த்தமுயற்சிதோல்வி கண்டுள்ளது. (உ-9)

### இஸ்ரேலை எதிர்த்து
# கெய்ரோ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

[ஜெருசலேம்]
இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கெய்ரோ பல்கலைக்கழக மாணவர்கள் ஞாயிறன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.
மேற்படி சம்பவத்தின் போது மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன என்றும், இம் மோதலில் ஒரு அதிகாரியும் 6 மாணவர்களும் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ் வாரம், நடைபெற்ற அரபு நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு முன்பாக பலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காகவே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது:
இதேவேளை இம் மாநாடு தோல்வியாக முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-9]

# கன்னியாஸ்திரியைக் குத்திக் கொன்ற பிக்கு

(வாஷிங்டன்)
அமெரிக்காவில் உள்ள மியாமிப் பகுதியில் இளம்பிக்கு ஒருவர் கன்னியாஸ்திரி ஒருவரை அடித்துக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ள சம்பவம் அப்பகுதியில் கடும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
மதம் சார்பாக எழுந்த எதிர்ப்புணர்ச்சியே இக்கொலைக்குக் காரணமாக இருக்கலாமென நம்பப்படுகிறது.
மேற்படி பௌத்த பிக்கு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இக்கொலை சம்பந்தமான விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

### இந்தியப் பிரதமரின்
# சுயசரிதை வெளியீட்டு விழாவில் காங்கிரஸ் தொண்டர்கள் கல்வீச்சு

இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புத்தக வெளியீடு ஒன்று அண்மையில் பூனாவில் உள்ள பாலகந்தர்வராங் மண்டபத்தில் நடைபெற்றது.
மேற்படி புத்தக வெளியீடு நடைபெற்ற சமயம், காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் பலத்த பொலிஸ் பாதுகாப்பையும் மீறிகல்வீச்சில்ஈடுபட்டுள்ளார்கள். கல்வீச்சில் ஈடுபட்ட இக்காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் மீது பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனக்குற்றம் சாட்டப்பட்டுள்ளதுகுறிப்பிடத்தக்கது.
[உ-9]

### துப்பாக்கி முனையில்
# ஐ. நா. பணியாளர் 9 பேர் கடத்தப்பட்டனர்

(மொகாடிஷு)
சோமாலியாவில் நிவாரண வேலைகளில் ஈடுபட்டு வந்த 9 ஐ. நா ஊழியர்களை தீவிரவாதக் குழு ஒன்று துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளது.
3பிரிட்டிஷ்காரர்கள், அமெரிக்கர் ஒருவர், பிரெஞ்சுக்காரர் ஒருவர், ஒரு பெல்ஜியவாசி மற்றும் மூன்று வெளிநாட்டுநிபுணர்கள் ஆகியோரே கடத்தப்பட்டுள்ளனர்.
கடத்தப்பட்ட இவ் ஐ. நா ஊழியர்களை மீட்கும் பணி ஆரம்பித்துள்ளதாக சோமாலிய உள் நாட்டமைச்சகம் தெரிவித்துள்ளது. (உ-9)

# பிரான்ஸ் புகையிரத ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்

(பாரிஸ்)
பிரான்ஸின் புகையிரத ஊழியர்கள வேலை நிறுத்தத்தில குதித்துள்ளனர்.
நீண்ட நாள் கோரிக்கையான சம்பள உயர்வையிட்டும், புகையிரத இலாகாவின் நிர்வாகமட்டத்தில் ஏற்படுத்த இருக்கும் மாற்றங்களையிட்டும் ஊழியர்கள் வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ளனர்.
நாடு பூராவும் நெடுந்தூர, குறுந்தூர புகையிரதப் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்த போதும் மூன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் நெடுந்தூர சேவைகள் நடைபெற்றன.
நாடு தழுவிய இந்த வேலை நிறுத்தங்களால் காரியாலயங்களுக்குச் செல்வோர், தூரப்பயணம் செல்வோர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளானர்.
புகையிரதத் துறையைச் சேர்ந்த பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (து)

# சீனச் சனத்தொகை 126 கோடி 50 இலட்சம்
### அண்மைய புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

சீனாவில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி அந் நாட்டின் சனத்தொகை 126 கோடி 50 இலட்சம் என கணிப்பிடப்பட்டுள்ளது.
இத் தொகை 1990 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகைக் கணக்கைவிட 11. 06 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
உலகிலேயே சனத்தொகை அதிகமான நாடு என்ற பெயரை சீனா தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது; (உ-9)

வன் கண் குடிகாத்தல்
கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது
அமைச்சு
குறள்

# வலம்புரி

## தந்தைசெல்வா ஏற்கார்!

தந்தை செல்வநாயகத்தின் 103 ஆவது ஜனன தினம் இன்றாகும். ஈழத் தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்த உத்தமரின் ஜனன தினத்தை ஒரு கணம் சிந்தையிலிருத்துவது தமிழர்களின் தலையாய கடமையாகும். தந்தை செல்வநாயகம் தமிழர்பக்கத்தில் உதயமான அரசியல் தலைவர்களில் முதன்மையானவர் தனது தேட்டத்தைச் செலவிட்டு அரசியல் புலத்திலேயே ஓர் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியவர் அவரின் நேர்மை–அரசியல் சித்தாந்தம் தூர நோக்குடையது. யதார்த்த சிந்தனையோடு கூடியது. அதனாலன்றோ இன்றும் அவர் ஈழத் தமிழர்களின் தந்தை என்று போற்றப் படுகிறார். கட்சி நலமன்றி தமிழர் நலன் எனப்பாடு பட்டதந்தை செல்வாவின் வாழ்வை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கும் போதும், இப்போதைய அரசியல் வாதிகளைப் பார்க்கும் போதும், இறைவா தமிழர் என்ன பாவம்செய்தார்களென்று தலை தலையென அடித்து 'அம்போ' எனக்கத்த வேண்டும்போல் தோன்றுகிறது.

ஊழல் ஒருபுறம், ஊதாரித்தனம் மறுபுறம் என்ற எல்லைக்குள் இருந்து கொண்டு ஏழைகள் மீது அவர்கள் விடும் அதிகாரத்தை எண்ணினால் சிந்தை தடுமாறுகிறது. இருவேடதாரிகளாக அங்கொரு கதை, இங்கொரு கதை என்று கோள் மூட்டும் குரூரமானவர்க்கு கதிரை, ஏழைகளின் வயிற்றில் அடித்து ஊழல் செய்யும் ஊதாரிகளுக்கும் மதிப்பாடை.

வஞ்சகக் கூட்டம் மலிந்து போன இம் மண்ணில் – நீதி மறைந்து ஆணையிடும் அதிகாரம் தலைக்கேறி பித்தலாட்டம் நடக்கும்இந் நேரத்தில்செல்வா சதுக்கம் திறந்து வைத்தாலும், நேர்மையின் சிகரமான தந்தை செல்வாவின் ஆத்மா நிச்சயம் அதனை ஏற்றுக் கொள்ளாதென்பது உறுதி.

ஏழைகள் வீட்டில் எரிந்த அடுப்பை அணைத்த நீசர்களின் கரம்பட்ட காரியத்தை உத்தம ஆத்மாக்கள் ஒரு போதும் ஏற்பதில்லை. ஆதலால் தந்தை செல்வா நிச்சயம் சதுக்கத்தை ஏற்கார்.

# ஈழத்துக் காந்தியெனப் போற்றப்பட்ட
# தந்தை செல்வா தாயினும் நல்ல தலைவர்

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை ஒட்டிய கட்டுரை.

இலங்கை அரசு பத்து லட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களின் பிரஜா உரிமையையும், வாக்குரிமையையும் சட்டத்தின் மூலம் ரத்துச் செய்தது 1948 ல் ஆகும். அதனால் நாடாளுமன்றத்தில் இருந்த ஏழு பிரதிநிதிகள் பதவியிழந்தனர். அச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த தாம் சார்ந்திருந்த கட்சியை விட்டு வெளியேறித் தமிழரசுக் கட்சியை நிறுவினார் தந்தை செல்வா. அன்று வடக்கு - கிழக்கு இணைந்த தனி மாநிலமாக - சமஷ்டி ஆட்சியொன்று தமிழ் மண்ணில் மலரவேண்டுமென்று பெரிதும் அவாவி நின்றார்.

### தமிழ் உணர்வு

இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதி நாளை இலங்கைத் தமிழனுக்கும் இழைக்கப்படும் என அறைகூவல் விடுத்தார்: கொண்ட கொள்கையில் பிடிப்பும், மக்கள்மீது பற்றும் கொண்டு தன்னலமற்ற தலைவனாக விளங்கினார்.

இந்தியத்தமிழனும் இலங்கைத் தமிழனும் உணர்வாலும், உறவாலும் ஒன்றுபட்டவனே என்றஉணர்வைத் தூண்டிய உத்தமர் தந்தை செல்வா.

### தமிழரசுக் கட்சி

தமிழரசுக் கட்சிக்குக் கருவிலே கண்டம். 1952 ஆம் ஆண்டுத்தேர்தலில் கட்சி தோற்கடிக்கப்பட்டது. பெரியவரே காங்கேசன் துறைத்தொகுதியில் தோல்வியுற்றார். அரச சார்புப்பத்திரிகைகள் "சமஷ்டிக்குச்சாவு மணி" என கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டு கொக்கரித்தன. செல்வாவைப் பொறுத்தவரை கட்சிசந்தித்த முதல்தேர்தல் ஒருதத்துவத்தின் பிரசவ வேதனை. ஆயினும் வடக்கு மாகாணத்



தில் கோப்பாயில் வன்னியசிங்கமும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் இராஜவரோதயமும் ஈட்டிய வெற்றிகள் வேதனையின் மத்தியிலும் ஈட்டியசாதனைகள். தளர்ந்துவிடுதல் தந்தைக்கு என்றும் கிடையாத பெரும் ஆற்றலாகும். தம் பணியைத் தொடர்ந்த ஒப்பற்ற தலைவன் 1956 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தேர்தலில் வலிவின் பெருமையை நிலை நாட்டத் தவறவில்லை. தமிழரசுக் கட்சி தழைத்தோங்கியது. 1974 ல் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் கூட்டிணைந்து தமிழர் விடுதலை கூட்டணியாகப் பரிணமித்தது.

### சட்டமேதை

ஈழத்துக் காந்தியென எம்மனோரால் போற்றப்பட்ட, போற்றப்படும் தந்தை செல்வா சட்டத்துறையில் சாதனைகள் புரிந்ததீரர். கொழும்பிலுள்ள உச்ச நீதிமன்றங்களில் புகழின் உச்சியில் திகழ்ந்த உத்தமர். அதனால் இராசாத்தி அத்துவக்காத்து என்ற தகைமையைப் பெற்றவர்.

### ஈழத்துக் காந்தி

தமிழர் உரிமைகளுக்காக சாத்வீக முறையில் சட்ட மறுப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைவாசம், தடுப்புக் காவல் என விழுப்புண் பட்டவர்: இலங்கை அரசியல் களத்தில் காந்தீய நெறியில் கிளர்ச்சிகளை அறிமுகப்படுத்தியவர் என்பதால் ஈழத்துக் காந்தி என்ற சிறப்புப் பெயருக்குஉரியவர், வேடிக்கையாசப்பேசிய பிரதமர் பண்டாரநயாக்கா, பாரதப் பிரதமர் நேருவிற்கு அறிமுகம் செய்கையில் 'அடிக்கடி காந்தீயக் கிளர்ச்சியை நடத்தி என்னை மிரட்டுகிறவர்' எனஅறிமுகம் செய்தார்.

கைகள் செய்ததும் வரலாறு தந்த பாடங்கள.

1957 ல் பண்டாவுடனும், 1960 ல் ஸ்ரீமாவே வுடனும் 1965 டடலியுடனும் பெரியவர் செய்த ஒப்பந்தங்கள் எழுதி மை உலர்வதற்கு முனபாகவே மீறப்பட்டன இதனால் நிதானா வாதியான தந்தை செல்வா பிரிவினைக்குத்தூண்டப்பட்டார். தமிழ் ஈழக் கோரிக்கையை முன் மொழிந்தார்.

1972 ல் ஸ்ரீமாவோ அரசு புதிய அரசமைப்பைஉருவாக்கிய போது தமிழரின் எதிர்ப்பைப் பிரதிபலிக்க தனது நாடாளுமன்றப் பதவியை இராஜினாமாச் செய்து இடைத்தேர் தலைக்காங்கேசன் துறையில் சந்தித்தார். அமோக வெற்றியும் ஈட்டினார்.

### அறப் போர்

தந்தை செல்வா நேர்மையும், கண்ணியமும் மிக்க தலைவர் என மாற்றானாலும் போற்றப்பட்டவர். செல்வாவின் நாமம் சொன்னால் பேதங்கள் மறையும் நிலை. அத்தகைதொரு அரசி கூறினாரா அல்லது விடயம்

**கார்த்திகேயன்**

### தமிழகத் தலைவர்கள்

செல்வா மேற் கொண்ட போராட்டங்களுக்கு 'கல்கி' இதழ் மூலம் ராஜாஜியும் திராவிட நாடு இதழிலும தி.மு.க. மாநாட்டுத் தீர்மானங்களிலும் அண்ணாவும் தார் மீக ஆதரவு தந்திருக்கிறார்கள். இதற்கு மேலாக சிலம்புச் செல்வர் ம.பொ.சியின் 'தமிழரசுக்' கழகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தது.

இலங்கைத் தமிழர்கள் பிரதேச பேதங்களால் நலிவுற்ற காலம் இல்லாமலில்லை. ஆட்சியாளர்கள்அந்தத் துவேசத்தீயை வளர்த்துக் குளிர் காய்ந்தனர். இந் நிலையில் பிளவுகளை அகற்றிதமிழரை ஒரு கொடியின் கீழ் ஓரணியில் திரட்டி வலிமையான ஒரு சக்தியாக உருவாக்கியவர் தந்தை செல்வாவே.

### வரலாறு

இந்த அபூர்வ மனிதனின் சக்திக்குப் பின் புலமாக அமைந்தது தன்னல மில்லாத் தனிப் பெருமையே ஆகும். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக செல்வா போராட்டங்களை நடத்துவதும் அவரைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உறுதி மொழிகள் தந்து உடன்படிக்

யல் வாதியை நாம் தலைவராகக்கொண்டுவாழ்ந்தமை பெரும்பாக்கியமே.

கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருவதுஎனக் கட்டியங் கூறிய கவிஞன் நாமக்கலார் தமிழர் உரிமைக்காக பெரியவர் சத்தியயுத்தத்தை தொடங்கினார். அறப் போர் திசை மாறியது. சிங்கள மக்களே பொறுப்பாளிகள். காந்திய நெறியில் தொடங்கிய உரிமைப் போராட்டம் உயிரழிவுகளின் உன்மத்த கோலததில்.

### கடவுளே காக்க வேண்டும்

உரிமைப்போராட்டநீண்ட பயணம், கொடுமை தருவது ஏன்? அப்பாவித் தமிழர்கள் கண்களில் நீர் வரண்டு போவதேன்? காலத்தின் கொடுமையா? கடவுளின் சாபமா?

மறைவதற்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் 'தமிழரை இனிக் கடவுள் தான் காக்க வேண்டும்' என்றார் செல்வா விரக்தியில் அறிந்து கூறினாரா?

பெரியவரே! தமிழ் மக்களை ஆகர்ஷித்த பெருமைக்குரியவரே 'அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' என்ற கூற்றை தங்கள் தூய்மையும் வாய்மையும் நிறைந்த அரசியல் வாழ்வு யொய்பாக்குகிறது.

---

மருதடி விநாயகரின் மஹோற்சவத்தை யொட்டி வெளியிடும் கவிதை

## கண் திறந்து பாருமையா

மாணியம் பதியில் எங்கள் மனங்களில் நிறைந்தவனே
மருத மரத்தடியில் வந்தமர்ந்தவனே – மா
மருந்தாக எம் மனங்களுள் நுழைந்து
மனமுருக வைத்து எம்மை காப்பவனே

வேழ முகத்தவனே
மன்றாடிக் கேட்கிறோம்.
மண்குளிர எம் மனம் குளிர வாருமையா

கல்லாக் இருந்து கொண்டு கருணை மழை பொழி
பவனே
கல்லான மனங்களையும் கரைந்துருக வைப்பவனே
கண் திறந்து பாருமய்யா.
கவலைகளைத் தீருமய்யா

அன்பு அடியார்.

---

## தவக்காலச் சிந்தனை -32



இயேசுவைப் போல் மனிதர்களில் யாருமே என்றுமே பேசியதில்லை. அவரது வார்த்தைகள் சிலருக்கு சில வேளைகளில் ஆனந்தம் தந்தன. சிலவேளைகளில் அமைதியும் ஆறுதலும் தந்தன; சிலரை நெருப்பில் அமர்த்தியது. சிலரது நேர்மையற்ற வழியைத் தட்டிக் கேட்டது. நேர்மனத்தோடு அவரைக் கண்டவர்களும் கேட்டவர்களும் மாற்றமடைந்தனர். அவரை நம்பினர். அவர் காட்டிய வழி நடக்க முடிவெடுத்தனர். குறுகிய மனம் படைத்தவர்களோ மனமாற்றமடையவில்லை.

அவரை நம்பவில்லை. அவர் வழியை ஏற்கவில்லை: அது மட்டுமல்ல உள்ளம் குத்துண்டு அவரை ஒழிக்க வழி தேடினர். இயேசுவை நம்பிய மக்களை திருச்சட்டம் தெரியாத சபிக்கப்பட்ட மந்தைக் கூட்டம் என்றனர். திருச் சட்டம் அனைத்தும் அறிந்தோரை இயேசுவின் வார்த்தைகள் சாவல் விட்டு அவர் தம் முகத் திரையையும் அகத் திரையையும் கிழித்தது: அடைபட்டு நம்பாத உள்ளங்கள் ஆண்டவனின் ஒளியைக் கண்டு கொள்ள இயலாதவை!

காவலன்

---

## ஜனாதிபதியால்
# நாட்டிற்கு அகௌரவம்
# ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரிட்டிஷ் பிரதமரை உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்திக்காது நாட்டிற்கு அகௌரவத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஐக்கியதேசியக் கட்சியின்உபதலைவர் காமினி அத்துக்கோறள குற்றஞ் சாட்டியுள்ளார்.

பிரிட்டனுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்தமை குறித்து பிரதமர் ரொனி பிளேயருக்கு நன்றி தெரிவிக்க நடவடிக்கை எடுப்பதாக பெரும் பிரச்சாரம் செய்துவிட்டு அங்கு சென்ற ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க இறுதியில் பிரிட்டனின் சாதாரண வாக்காளர் போன்று பாராளுமன்றத்திற்கு சென்று பிரதமரைச் சந்தித்துள்ளார் என ஐக்கிய தேசியக்கட்சி மேலும் குற்றம் சாட்டியுள்ளது (செ

### காவலரண் அமைப்பு

[இணுவில்]

இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் கே கே. எஸ் வீதிப்பகுதியில், அண்மையில் புதிதாக இராணுவ காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1622)

# எனதுகைதுக்குஎன்னுடன்நெருங்கி பழகியஒரு தமிழ்மகனே காரணம்

## பத்திரிகையாளர் திருச்செல்வம் தெரிவிப்பு

என்னுடன் பழகிஎன்னிடம் உதவிபெற்ற தமிழ்மகன் ஒருவரே பொலிஸாருக்கு பொய்யான தகவலை கொடுத்து எனது கைதுக்கு காரணமாக இருந்தார் இவருக்குரிய தண்டனையை இறைவன்தான் கொடுக்க வேண்டும்.

நேற்று கோட்டேநீதவான் பிரியந்த பெரேராவினால் விடுதலை செய்யப்பட்டபத்திரிகையாளர் திருச்செல்வம் தனது விடுதலை குறித்து வலம்புரிக்கு தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தனது விடுதலை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் எனது விடுதலைக்காக பாடுபட்ட சர்வதேச ஊடகவியலாளர் சங்கம்(ஆர் எஸ்.எவ்) வடஇலங்கை பத்திரிகையாளர்சங்கம் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் என்பவற்றுக்கும்எனது விடுதலைக்காக வாதாடிய யாழ் மாவட்ட எம்பியும் சட்டத்தரணியுமான அ. விநாயகமூர்த்தி சட்டத்தரணி என். சிறிகாந்தா இவர்களது உதவியாளர்களான சட்டத்தரணி சிறிதரன் சட்டத்தரணி கணேசராசா ஆகியோருக்கும் மற்றும் பிரமுகர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மங்கையர்மனம்மயங்கும்
மங்காத அசல் 22கரட்
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
அதுதான்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1711)

## செல்வாவின் ஜனன தினம்

தந்தை செல்வாவின் 103 வதுஜனனதினத்தை யொட்டி இன்று அவரதுநினைவுத்தூபி அமைந்துள்ள கோட்டைப் பகுதியில் சமய அனுட்டானங்கள் இடம் பெறுவதுடன் செல்வாசதுக்கமும் திறந்து வைக்கப்படவுள்ளது. [ந-43]

## வவுனியாவில் 25 கிலோ நிறையுடைய கிளைமோர் வெடி மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் 25 கிலோ எடையுள்ள கிளைமோர் கண்ணிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகபொலிசார் அறிவித்துள்ளனர்.

வவுனியாவாரிக்குட்டிஎன்ற இடத்தில் பற்றைகள் வளர்ந்துள்ள வெறும் வளவொன்றிலிருந்தே இந்த கிளைமோர் கண்ணிவெடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிசாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரொருவர்கொடுத்த தகவலை அடுத்தே இக்கிளைமோர் கண்டுபிடிக்கப்பட்டது.

கிளைமோர் வெடியுடன் மூன்று கிரனேட்டுக்களும், வெடிக்க வைக்கும் கருவி இரண்டும் பொலித்தீன்பை ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததென பொலிசார் தெரிவித்தனர். (ம)

## ஆட்கொணர்வு மனுவை அடுத்து நீதிமன்றில் ஆஜர்

(வவுனியா)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தனது மகனை நீதிமன்றில் ஆயராக்குமாறு அவரது தாயார் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்த மறுநாளே கைது செய்யப்பட்டிருந்த கிருஷ்ணன் விக்னேஸ்வரன் (வயது 23 வவுனியா மாவட்டப் பதில் நீதவான் எம். சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரின் உடலில் காயங்கள் இருப்பதினால் அவரை உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் அங்கு அவரை சிறைக்காவலர்களின் காவலில் வைக்குமாறும் நீதவர்ன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆட்கொணர்வு மனு தொடர்பாக வலம்புரிநேற்று முன்தினம் செய்திவெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### பயங்கரவாத --

கொண்டாலும் அதன் முன்னணி அமைப்புக்கள் தொடர்ந்தும் அங்கேஇயங்கிக் கொண்டிருக்கின்றன.

ரொனிபபிளேயர் அரசும் புலிகள்மீதுபெரிதாகநடவடிக்கை எதையும் எடுப்பதாக தெரியவில்லை ஆனால்பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக்காட்டி அதுஇலங்கை அரசை மிரட்டிக்கொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்களை நடத்துமாறு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுப்பதற்கு பிரிட்டன் இச்சட்டத்தைப் பயன்படுத்துகிறது எனக்கூறினார், (ந)

### வவுனியாவில் --

மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் கல்விப்பணிப்பாளர் க. சினிவாசகம்தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வவுனியா அரச அதிபர் கே. கணேஷ், வவுனியா வளாகப் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், பிரதேச செயலாளர் திருமதி மேரி இமைல்டாசுகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். சிவமகாராசா, மாவைசேனாதிராசா உட்படபலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (வ)

### புரிந்துணர்வு ---

இவ்வாறு அனுப்பிவைக்கப்படும் பொருட்கள் ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ள 81 பொருட்களும் அடங்கமாட்டாது. எனினும் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இந்தப்புதிய நடைமுறையின்கீழ் புதியபோக்குவரத்துப்பாதைகளையும் அரசு திறக்கவுள்ளது இப்பாதைகள் திறக்கப்பட்டபின்னர் பொருட்கள் தாராளமாக மக்களை சென்றடையவுள்ளதாகவும் அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறுஇருக்க இத்தகையதொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசு ஒப்பமிடுவதற்கு ஏற்கனவேமறுப்புத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

### தேங்காய் --

காலை இழந்தவரில் ஒருவர் தென்னந் தோட்ட உரிமைபாளர் என்பதும் மற்றவர் தேங்காய் பிடுங்குவதற்காக மற்றவரால் அழைத்துச் செல்லப்பட்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது. [ந-23]

### திருச்செல்வம்

மற்றொரு சந்தேகநபரான மட்டக்களப்பைச் சேர்ந்த பரமசிவம் மகேஸ்வரநாதன் (வயது-30) விசாரணை முடிவடையாததால் திரும்பவும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

பத்திரிகையாளர் சார்பில் வாதாடிய யாழ்மாவட்ட எம்பியும் சட்டத்தரணியுமான அ. விநாயகமூர்த்தியின் யூனியரான சட்டத்தரணி வி. சிறிதரனும், சட்டத்தரணி த. சிறிகாந்தாவின் யூனியரான சட்டத்தரணி எஸ். கணேசராசாவும்நீதிமன்றல்ஆஜராகி இருந்தனர்.

கொழும்பில் உறவினர் ஒருவரின் திருமணவைபவத்திற்கு சென்றவேளையில் பத்திரிகையாளர் திருச்செல்வம் விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்தவர் என்று புலனாய்வுத் துறைக்குக் கிடைத்த தகவலை அடுத்து கடந்த ஜனவரி மாதம் 2ம் திகதி வெள்ளவத்தைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்பதுகுறிப்பிடத்தக்கது. (வ)

## பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தலைகண்டித்து மட்டக்களப்பில் பேரணி

(கொழும்பு)

மன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கிளர்ச்சித் தடுப்புப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட இரு பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படடமையைக் கண்டித்து மட்டக்களப்பில் நேற்று கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இக்கண்டனப் பேரணியில் கடற்படையினரின் இக் கொடூர செய்கைகளைக் கண்டித்து ஊர்வலத்தில் கோஷமெழுப்பினர்.

இதே வேளை கொழும்பிலும், மன்னாரிலும் இச் சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள்ஏற்பாடு செய்து வருகின்றன.

## வ-கி மாணவர்களுக்கு 80 வீத வரவில் தளர்வு

(கொழும்பு)

க.பொ.த. (உ-த) பரீட்சைக்கு விண்ணப்பிக்க எண்பது வீத பாடசாலை வரவு இருக்க வேண்டும் என்ற விதிமுறை வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு தளர்த்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் எண்பது வீத பாடசாலை வரவைக் கொண்டிருக்க வேண்டும் எனும் விதிமுறை சுற்றுநிருபத்தின் மூலம் விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இவ் விதிமுறையில் தளர்வை ஏற்படுத்த கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி செனரஸ் நாணயக்கார இணக்கம் தெரிவித்துள்ளார். (செ)

### இரு ---

சமர்ப்பிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் திசை திருப்பும் நோக்கில் சம்மந்தப்பட்ட கடற்படையினரை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (ம)

## உரும்பிராயில் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகம் நடாத்தும்உதை பந்தாட்டப் போட்டியின்அரையிறுதிஆட்டத்தில் இன்று சென் நீக்லஸ் எதிர் சென்மைக்லஸ் விளையாட்டுக்கழகமும்,

பொற்பதி எதிர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. உரும்பிராய் இந்துக்கல்லூரிமைதானத்தில் நடக்கும் இன்நிகழ்வு மாலை 4மணிக்குஆரம்பமாகும். (ந-4)


தங்க நகை உலகில் மங்காப் புகழ்பெற்ற தங்க
ஆபரணங்களின் சொர்க்கபுரி
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1709)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.